## முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.74/2018

வாதி தரப்பு 1வது சாட்சி உண்ணாமலை என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. ஜெயஸ்ரீ, நகல் பிரிவு கண்காணிப்பாளர்/கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் (பொறுப்பு) என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. உண்ணாமலை | வயது | : | 77/23 |
| கணவர் பெயர் | : | முத்தையா | தாலுகா | : | காரைக்குடி |
| கிராமம் | : | பள்ளத்தூர் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-30.11.2023

வா.சா.1

**<u>5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 1ம் பிரதிவாதி எனது தகப்பனார் என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

2. என் தாயார் என் தகப்பனாருக்கு முன்னரே இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

3. எனது பெற்றோருக்கு நாங்கள் மூன்று பிள்ளைகள். முதல் பிள்ளை எனது சகோதரர். அவர் பெயர் பார்த்தசாரதி. நானும், 3ம் பிரதிவாதி மீனாட்சியும் பெண் பிள்ளைகள்.

4. எனது சகோதரர் பார்த்தசாரதி இறந்துவிட்டதால், அவரது மனைவி மற்றும் குழந்தைகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன்.

5. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் கூட்டுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். கூட்டு குடும்பம் என்பது நான், எனது அப்பா, எனது சகோதரர், சகோதரி மற்றும் எனது பெரியப்பா ஆகியோர்களை சேர்த்துதான் சொல்கிறேன்.

6. எனது தகப்பனார், பெரியப்பா, எனது சகோதரர் மற்றும் சகோதரி ஆகியோர் இருந்த காலத்தில் நாங்களும் கூட்டு அனுபவத்தில்தான் இருந்தோம். தற்சமயமும் கூட்டு அனுபவத்தில்தான் உள்ளோம்.

மு.மா.நீ,

7. வழக்கு சொத்துக்களில் எனக்கு, எனது சகோதரர் மற்றும் சகோதரிக்கு 1/3 பாகம் சம உரிமை உண்டு என்றால் சரிதான்.

8. இதுநாள் வரையில் வழக்கு சொத்துக்களில் பாகப்பிரிவினை ஏற்படவில்லை.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.